1971 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேலூரில் நடைபெறும் போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இன்னும் நவீன வசதிகள் வேண்டும் என்றும், இன்னும் கூடுதலான சுற்றுவளைவு (காம்பவுண்டு) வேண்டுமென்றும், விளையாட்டுத் திடலுக்குப் போதுமான காற்றோட்டமுள்ள வசதி வேண்டும் என்றும் போலீஸ் கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருந்தது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

காவலர் தொப்பியிலுள்ள ஆங்கில எழுத்துக்கள்

* 547 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையினர் தொப்பியில் உள்ள ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் தமிழ் எழுத்துக்கள் பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில், தமிழ் எழுத்துக்கள் பொருத்த அரசினிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால். ஆங்கில எழுத்துக்களிலேயே, தமிழ்நாடு என்ற வார்த்தையைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. ஏ. சுவாமிநாதன்: இந்தக் காவல் துறையினருக்கு இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற தொப்பி மிகப் பழமை வாய்ந்த ஒரு டிஸைனைக் கொண்டது. அதை மாற்ற தற்கால ரீதியில் கொஞ்சம் கவனித்து, வீர உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தொப்பியை மாற்ற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது ஒன்றும் குல்லாய் மாற்றுகின்ற வேலை செய்வதாக இல்லை. (சிரிப்பு)

Supply of motor cycles to Sub-Inspectors

* 548 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to provide motor cycle to Sub-Inspectors and Assistant Sub-Inspectors of Police in Tamil Nadu; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. (அ) & (இ) 100 காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு 14-6-1971 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. 95 மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டு 95 காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள ஐந்து மோட்டார் சைக்கிள்களும் விரைவில் வழங்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : In certain areas the Police is not in a position to do justice because they cannot run to the trouble spot immediately as there is no vehicle in the Police station. The Hon. Chief Minister told us that he had given about 100 cycle-motors. But it is not at all sufficient. Will this Government come forward sympathetically to sanction cycle-motors to all the police stations in the State immediately?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தரவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் படிப்படியாக ஆண்டுதோறும் 100 ஸ்டேஷன்களுக்குத் தருவது என்ற முடிவு அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு 100 ஸ்டேஷன்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன.

Police Station at Anchetty

* 549 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minster be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government to open a Police Station at Anchetty in Denkanikota Taluk, Dharmapuri District; and

(b) if so, when it will be opened?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Anchetty is situated in the forest which is away from the police station about 16 miles and afterwards also there are villages for about 16 miles. The total area is about 30 miles to the police station. So, will this Government come forward sympathetically to start a police station in that backward hilly area?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல், காட்டு நிலம் அதிகம் அடங்கியுள்ள அந்த இடத்திற்கு அண்மையான தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தைத் தவிர வேறு காவல் நிலையம் இல்லாத நிலையை அரசு உணர்ந்திருக்கிறது. இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்தது, இந்தச் செயற்குறிப்புக்கு ரூ. 23,625 ஆண்டு தொடர் செலவும், ரூ. 3,060 தொடராச் செலவும் ஏற்படும் என்று மதிப்பிட்டு, தற்போதைய நிதி நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை கொஞ்சம் சரியான பிறகு அதுபற்றி கவனிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Chief Minister whether it will be opened in the next year?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இப்போது அதை உறுதியாகச் சொல்வதற்கில்லை.